# வாக்காளர்களுக்கு தவெக பணம்? வேட்பாளர் பேச்சால் பரபரப்பு

**ஓமலூர், ஜூன் 4:** சேலம் மேற்குத் தொகுதி எம்எல்ஏ லட்சுமணன் வாக்காளர்களுக்குப் பணம் தந்ததால்தான் அத்தொகுதிக்கு அருகே உள்ள ஓமலூர் தொகுதியில் தவெக வெற்றி பெற முடியாமல் போனதாக ஓமலூர் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட அதியமான் பொதுக்கூட்டத்தில் பேசிய விடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

சட்டப்பேரவைத் தேர்தலில் சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர் அதியமான். இவர் ஓமலூர் அருகே தீவட்டிப்பட்டியில் அண்மையில் நடைபெற்ற வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் பேசும்போது, ஓமலூர் தொகுதியில் தவெக வெற்றிவாய்ப்பை இழந்ததற்கு, ஓமலூருக்கு அருகே உள்ள சேலம் மேற்குத் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற லட்சமணன், வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்ததுதான் காரணம்.

அத்தொகுதியில் தவெக வேட்பாளர் பணம் தந்த செய்தி ஓமலூர் தொகுதி மக்களிடமும் பரவியதால், நமக்கு அது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் 6,000 முதல் 10,000 வாக்குகள் தவெகவுக்கு பதிவாகாமல் போனது என்றார்.

# சிறுமிக்குப் பாலியல் துன்புறுத்தல்: கார் ஓட்டுநர் கைது

**திருச்சி, ஜூன் 4:** திருச்சியில் 16 வயதுச் சிறுமியை காரில் அழைத்துச் சென்று பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய சிவகங்கையைச் சேர்ந்த கார் ஓட்டுநர் போக்ஸோவின் கீழ் புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

திருச்சி காந்தி மார்க்கெட் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட தாராநல்லூரைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமி, தனது திருநங்கையான சகோதரனைப் பார்ப்பதற்காக அவர் மற்ற திருநங்கைகளுடன் தங்கியுள்ள கல்மந்தை காலனி குடியிருப்புப் பகுதிக்கு புதன்கிழமை பிற்பகல் சென்றுள்ளார். அப்போது, அங்கு பாச்சா என்ற திருநங்கையை காரில் அழைத்து வந்த சிவகங்கை மாவட்டம், திருபுவனத்தைச் சேர்ந்த எஸ். மாரிசெல்வன் (45) என்பவர் இருந்துள்ளார்.

இந்நிலையில், மாரிசெல்வன் 16 வயதுச் சிறுமியை மாலை 5 மணிக்கு காரில் அழைத்துச் சென்றுள்ளார். தொடர்ந்து, மாலை 6.30 மணிக்கு அந்தச் சிறுமி கீரைக்கடை பஜார் பகுதியில் சுயநினைவில்லாமல் விழுந்துகிடப்பதாக அவரது சகோதரிக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து, அங்கு சென்ற அவரது குடும்பத்தினர் சிறுமியை மீட்டு, திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

சிறுமியை காரில் அழைத்துச் சென்றமாரிசெல்வன், சிறுமிக்கு பழச்சாற்றில் மயக்க மருந்து கலந்துகொண்டு அவரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக சிறுமியின் சகோதரி அளித்த புகாரின்பேரில், கோட்டை அனைத்து மகளிர் போலீஸார் போக்ஸோ வழக்குப் பதிந்து மாரிசெல்வனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### தரிசன டிக்கெட்டில் மோசடி, முறைகேடு புகார்கள்

# திருச்செந்தூர் முருகன் கோயில் ஆணையர்கள் இடமாற்றம்

**திருச்செந்தூர், ஜூன் 4:** திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தரிசன டிக்கெட்டில் மோசடி, முறைகேடு புகார்கள் எழுந்த நிலையில், கோயில் இணை ஆணையர், உதவி ஆணையரை அதிரடியாக இடமாற்றம் செய்து அறநிலையத் துறை உத்தரவிட்டுள்ளது.

கோயிலில் ரூ. 100 தரிசன டிக்கெட் வழங்குவதில் போலி டிக்கெட்டுகளை வழங்கி ரூ. 25 லட்சம் மோசடி செய்ததாக மேனகா என்ற பணியாளர் கடந்த மே 14-ஆம் தேதி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். அவர் மீது கோயில் நிர்வாகம் அளித்த புகாரின் பேரில் பொருளாதார குற்றப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதைத் தொடர்ந்து, பல்வேறு புகார்களின் அடிப்படையில் அறநிலையத் துறை அமைச்சர் சீ.ரமேஷ், திருச்செந்தூர் கோயிலுக்கு கடந்த மே 29-ஆம் தேதி முன்னறிவிப்பின்றி வந்து ஆய்வு நடத்தினார்.

அப்போது, கோயிலில் நேர்வழியில் சென்று சுவாமி தரிசனம் செய்ய அமைச்சரின் உதவியாளரிடம் பேசி அர்ச்சகர் பணம் பெற்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அப்போது அன்னதான கூடம், கோயில் நிர்வாக செயல்பாடுகளை அமைச்சர் ஆய்வு செய்தார்.

இதையடுத்து அர்ச்சகர், இலவச முடி காணிக்கை செலுத்துவதில் பக்தர்களிடம் பணம் கேட்ட 2 பணியாளர்கள், தனியார் பாதுகாப்பு அதிகாரிகள் இருவர் என 5 பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பின்னர், கோயில் நிர்வாக செயல்பாடுகள் குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில், திருச்செந்தூர் கோயிலின் இணை ஆணையர், உதவி ஆணையர் ஆகியோரை அதிரடியாக இடமாற்றம் செய்தும் புதிய ஆணையர்களை நியமித்தும் அறநிலையத் துறை ஆணையர் வினய் வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

**இணை, துணை, உதவி ஆணையர்கள் நியமனம்:**

சென்னை, திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயில் இணை ஆணையர் அருணாச்சலம் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கும், திருச்செந்தூர் கோயில் இணை ஆணையர் ராமு திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயிலுக்கும், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் உதவி ஆணையர் லோகநாதன் திருச்செந்தூர் கோயிலுக்கும், திருச்செந்தூர் கோயில் உதவி ஆணையர் மெய்வேல் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், திருச்செந்தூர் கோயிலில் காலியாக இருந்த துணை ஆணையர் பதவிக்கு திருச்சி துணை ஆணையர், சரிபார்ப்பு அலுவலராக இருந்த யக்ஞ.நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருச்செந்தூர் கோயிலுக்கு புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் இணை ஆணையர் அருணாச்சலம், துணை ஆணையர் யக்ஞ. நாராயணன் ஆகியோர் ஏற்கெனவே இக்கோயிலில் பணிபுரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


## விற்பனை அறிவிப்பு

பாங்க் ஆப் இந்தியா
Bank of India BOI

கோயம்புத்தூர் சொத்து மீட்புக் கிளை, கோயம்புத்தூர் மண்டல அலுவலகம்
'ஸ்டார் ஹவுஸ்' எண்.324, ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர்–641 001.
போன்: (0422) 2397221, 2383074, மின்னஞ்சல் : assetrecovery.coimbatore@bankofindia.bank.in

**கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ–ஏல விற்பனை அறிவிப்பு.**

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/அடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, பாங்க் ஆப் இந்தியாவின் சம்பந்தப்பட்ட கிளையின், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கபூர்வ சுவாதீனம்** செய்து கொள்ளப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் **25.06.2026** தேதி அன்று விற்பனை செய்யப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட விலை, முன்வைப்புத் தொகை மற்றும் சொத்து விபரம் கீழே குறிப்பிட்டபடியாகும்.

**கிளை : குன்னூர் கிளை (கணக்கு தற்போது கோயம்புத்தூர் சொத்து மீட்புக் கிளைக்கு மாற்றப்பட்டுள்ளது) : கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : திரு.மணியன். S (கடன்தாரர்)**, த/பெ. ஸ்ரீனிவாசன், கதவுஎண்.48, HUDCO காலனி, சிவானந்தா காலனி, கோயம்புத்தூர் – 641 012 மற்றும் **2. திரு.B. ரமேஷ் (உத்தரவாதமளித்தவர்)**, த/பெ. பெல்லா கௌடர், கதவு எண்.2/192B, தப்பகோம்பை, கொணவக்கொரை கிராமம், கோத்தகிரி – 643 217.

**மொத்த நிலுவைத் தொகை : 02.06.2026** அன்றுள்ள நிலுவை **காலக்கடன் I** – க்கானத் தொகை **ரூ.33,77,701.94** உடன் தற்போதைய அடிப்படை விகிதமான **9.45%** உடன் **3.75%** Tenor பிரிமியம் வட்டியுடன் தற்போதைய **13.20%** ஆண்டொன்று வட்டி வீதம் **30.06.2018** தேதியிலிருந்து மாதாந்திர இடைவெளிகளில்; **02.06.2026** அன்றுள்ள நிலுவை **காலக்கடன் II** – க்கானத் தொகை **ரூ.54,26,520.85** உடன் தற்போதைய அடிப்படை விகிதமான **9.45%** உடன் **3.75%** Tenor பிரிமியம் வட்டியுடன் தற்போதைய **13.20%** ஆண்டொன்று வட்டி வீதம் **30.06.2018** தேதியிலிருந்து மாதாந்திர இடைவெளிகளில்; இரண்டும் சேர்த்து மொத்தம் **ரூ. 88,04,222.79** உடன் வட்டி செலவினங்கள் மற்றும் கடன்தாரர் அல்லது உத்தரவாதமளித்தவர் அவர்களின் ஏதேனும் பிற நிலுவைகள் உடன் கட்டணங்கள் மற்றும் பிற செலவினங்கள்.

**அசையாச் சொத்து விபரம் :** உத்தரவாதமளித்த திரு. B. ரமேஷ் பெயரில் உள்ள நிலம் குடியிருப்பு நிலம் மற்றும் கதவு எண்.2/192B கட்டிடம் அமைந்த, நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலூகா, கோத்தகிரி சார் பதிவு அலுவலகம், கொணவக்கொரை பஞ்சாயத்து மற்றும் கிராமம், புதிய சர்வே எண்.359/20, இதன் பழைய சர்வே எண்.314/2Aல் உள்ள மொத்தம் 9 சென்ட் நிலத்தின் எல்லைகள் விபரம்: வடக்கு – திரு. ஹாலனின் நிலப் போர்ஷன், தெற்கு – திரு. பெள்ளனின் நிலப் போர்ஷன், கிழக்கு – நடைபாதை, மேற்கு – திரு. ஹாலனின் நிலப் பகுதி.

**நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.34,75,000/– முன்வைப்புத் தொகை : ரூ.3,47,500/– ஏல உயர்வு மடங்கு : ரூ.50,000/–**

**இ–ஏலத் தேதி மற்றும் நேரம் : 25.06.2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.**
(ஏலம் தொடரும்பட்சத்தில், ஏலம் நிறைவு பெறும் வரைக்குமான 10 நிமிட அளவற்ற நீட்டிப்புகளுடன்)

அதிகாரம் பெற்ற அலுவலர் அறிந்த மற்றும் கிடைத்த தகவல்களின்படி மேற்குறித்த சொத்தின் மீது வில்லங்கம் எதுவும் இல்லை. இருந்தபோதிலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் சொந்த விசாரணையின்பேரில், வில்லங்கங்கள், சொத்தின் உரிமையாளர் குறித்து விசாரித்து, சொத்தினையும் பார்வையிட்டு திருப்தி செய்து கொள்ள வேண்டும். இந்த இ–ஏல விற்பனை/ஏலக்கேட்பு ஆன் லைனில் மின்னணு முறையில் மட்டுமே **https://BAANKNET.com** இணையதளம் மூலமாக நடைபெறும்.

**விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு இ–ஏலத்தோடு தொடர்புடைய பின்வரும் இணையதளத்தின் 'லிங்க்'கினை அணுகவும். https://www.bankofindia.bank.in/tenders**

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 02.06.2026

அதிகாரம் பெற்ற அலுவலர்
பாங்க் ஆப் இந்தியா



## கோரிக்கை அறிவிப்பு

நிறுவனச் சட்டம் 1956-இன்படி நிறுவப்பட்டுள்ளதும் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் (இனி 'SARFAESI சட்டம்' எனக் குறிப்பிடப்படும்) கீழ் இந்திய ரிசர்வ் வங்கியிடம் கடன் வசூல் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள டிரஸ்ட்டுகளின் டிரஸ்ட்டி எனும் முறையில் செயல்படுவது) (இனி 'ARCIL' எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரானவர் அசல் கடன் நிறுவனத்திடம் கீழ்க்காணும் அட்டவணையின் பத்தி எண் 2-இல் காணப்படும் கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர்கள் கடன் பெற்றுள்ளதை அடுத்தும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்குகள் தொடர்பான நிதிச் சொத்துக்களை ARCIL நிறுவனம் வாங்கியுள்ளதன் மூலம் SARFAESI சட்டத்தின்படி ARCIL ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனமாகிறது என்கிற அடிப்படையில் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 2-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் பின்வரும் கடன்தாரர்களுக்கு / கூட்டுக் கடன்தாரர்களுக்குக் கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மேல் வட்டியுடன் அவ்வறிவிப்பு நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் அந்த அறிவிப்புகள் அவர்களுள் சிலருக்குப் பல்வேறு காரணங்களால் சார்பு செய்யப்படவில்லை.

| கடன் கணக்கு எண் / அசல் கடன் நிறுவனத்தின் பெயர் / கோரிக்கை அறிவிப்பு நாள் / டிரஸ்ட்டின் பெயர் | கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் பெயர் | கோரிக்கை அறிவிப்பு நாள்படி மொத்த நிலுவைத் தொகை ரூபாயில் |
|---|---|---|
| **கடன் கணக்கு எண்:** 3611474500010163 **அசல் கடன் நிறுவனத்தின் பெயர்:** மணப்புரம் ஃபைனான்ஸ் லிட். **கோரிக்கை அறிவிப்பு நாள்:** 23.12.2025 **டிரஸ்ட்டின் பெயர்:** ஆர்சில்-டிரஸ்ட்-2026-002 | நஸீம் சையது - ஷெரிமா - முகமது சாகிப் | ரூ.21,16,437/- |

**சொத்தின் விவரம்:-** இனம் 1: 654 சதுர அடி பரப்பளவு கொண்ட சொத்தாகிய கட்டடத்துடன் கூடிய நிலம் மற்றும் அங்குள்ள அனைத்து மேம்பாடுகள். அமைவிடம் - SF எண் 1021/8C, கூடலூர்-2, G.R கிராமம், கூடலூர் சார்பதிவு அலுவலக வட்டாரம், நீலகிரி மாவட்டம். இத்துடன் வழி உரிமைகள் மற்றும் அங்குள்ள அனைத்து துணைப்பகுதிகள் உட்பட - இனம் 2: 30 சென்ட் (மொத்தப் பரப்பளவு புஞ்சை ஏக்கர் 0.42) பரப்பளவு கொண்ட சொத்தாகிய குடியிருப்பு காலி நிலம் மற்றும் அங்குள்ள அனைத்து மேம்பாடுகள். அமைவிடம் - SF எண் 261/2 (உட்பிரிவுக்குப் பின் 261/21), கூடலூர்-2, G.R கிராமம், கூடலூர் சார்பதிவு அலுவலக வட்டாரம், நீலகிரி மாவட்டம். இத்துடன் வழி உரிமைகள் மற்றும் அங்குள்ள அனைத்து துணைப்பகுதிகள் உட்பட.

ஆதலால் மேற்குறிப்பிட்ட கடன்தாரர்களுக்கு / கூட்டுக் கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேலே அந்தந்தக் கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் பெயரில் குறிப்பிட்டுள்ள மொத்த நிலுவைத் தொகையையும் இவ்வறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்திவிடுமாறு இதன் மூலம் அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். அவரவர் கடன் கணக்குகளில் செலுத்த வேண்டிய தொகை நாளிது வரையில் நிலுவையில் இருப்பதால் தங்கள் பெயருக்கு எதிரே இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகையையும் இவ்வறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். இவ்வாறு மொத்த நிலுவைத் தொகையையும் மேல் வட்டியுடன் சேர்த்து அந்தந்தக் கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர்கள் செலுத்தத் தவறினால், மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மீது சட்டப் பிரிவு 13(4)-இன் கீழ் கடனீட்டுச் சொத்து அமலாக்க நடவடிக்கையை ஆர்சில் நிறுவனம் மேற்கொள்ள நேரிடும். மேலும், மேற்கூறிய சட்டம் மற்றும் அதன் கீழான விதிகளின்படி இதர வழிவகைகளில் அறிவிப்பை உங்களுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. SARFAESI சட்டத்தின் பிரிவு 13(8)-இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளபடி, மேலும் இதன் மூலம் உங்களுக்கு அறிவிப்பது யாதெனில், பொது ஏலத்திலான அல்லது தனிப்பட்ட வகையிலான விற்பனை மூலம் சொத்தினைக் கைமாற்றுவதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் நாளுக்கு முன்னர் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஆர்சில் நிறுவனத்துக்குச் சேர வேண்டிய மொத்தத் தொகையையும் செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் செலுத்தி அடமானத்தினை மீட்டுக் கொள்ளலாம்.

SARFAESI சட்டம், பிரிவு 13(13)-இன்படி, கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது வேறு எந்த வகையிலும் கைமாற்ற மற்றும் / அல்லது ஒப்பந்தமிட நீங்கள் இதன் மூலம் தடை செய்யப்படுகிறீர்கள் என்பதை நினைவில் கொள்க.

இடம் : தமிழ்நாடு
நாள் : 05.06.2026

ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்,
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட். (டிரஸ்ட்டி எனும் முறையில்)

Arcil
**அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.**
பெருநிறுவன அடையாள எண் (CIN): U65999MH2002PLC134884, இணையத்தளம்: www.arcil.co.in
**பதிவு அலுவலகம்:** தி ரூபி, 10ஆவது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை - 400028. **தொ.பே. எண்:** 022-66581300.



## பஞ்சாப் நேஷனல் வங்கி
## punjab national bank

கடன் மீட்பு நிர்வாகக் கிளை (ARMB) : எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு.
கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422 2231314, 0422-2231345. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 23.06.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)**

**முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 23.06.2026, மாலை 3.00 மணி வரை**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

**பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : (19.11.2025 தேதிய ஆன்லைன் வில்லங்கச் சான்றின்படி)**
1. உதவி ஆணையாளர், வேலாண்டிபாளையம் வரி வட்டம், கோயம்புத்தூர் – GSTIN:33ANEPA2490D1ZN/2024, தேதி : 01.2025 (TVL சுசீலா சில்க் எம்போரியம் ஆறுமுகம், த/பெ. வெங்கடசாமி).

**பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை**

| வ. எண். | கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம் | பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்) | அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் /கொள்நிலை/ ஆக்கபூர்வ சுவாதீனம் | 1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | **M/s.லேண்ட் மார்க் இம்பெக்ஸ் இன்டர்நேஷனல் – கிளை : திருப்பூர் மெயின் (044900) (தற்போது கோயமுத்தூர் ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது)** <br> **கடன்தாரர்கள் :** <br> **1) M/s.லேண்ட்மார்க் இம்பெக்ஸ் இண்டர்நேஷனல்**, எண்.39/93-A, சக்தி நகர், கவுண்டம்பாளையம், கோயமுத்தூர் – 641 030 <br> **2) செல்வி. C.பிரியங்கா** (பங்குதாரர், M/s.லேண்ட்மார்க் இம்பெக்ஸ் இண்டர்நேஷனல்), த/பெ. திரு. சந்திரசேகர், வசிப்பிட முகவரி : 8/271, தேவாங்கபுரம் வீதி, தொட்டம்பாளையம், சத்தியமங்கலம் – 638 451; <br> **3) திரு. R.தானேந்திரகுமார்** (பங்குதாரர், M/s.லேண்ட்மார்க் இம்பெக்ஸ் இண்டர்நேஷனல்), த/பெ. திரு. ராமச்சந்திரன், வசிப்பிட முகவரி : 8/123, பகதூர் இலுப்பநத்தம், சிறுமுகை அஞ்சல், மேட்டுப்பாளையம் – 641 302; <br> **4) திரு. R.தாமோதரன்** (பங்குதாரர், M/s.லேண்ட்மார்க் இம்பெக்ஸ் இண்டர்நேஷனல்), த/பெ. திரு. ராமசாமி, வசிப்பிட முகவரி : 284, புங்கம்பள்ளி, விண்ணப்பள்ளி அஞ்சல், சத்தியமங்கலம் – 638402; <br> **5) திருமதி. A.கவிதாம்பிகை** (பங்குதாரர், M/s.லேண்ட்மார்க் இம்பெக்ஸ் இண்டர்நேஷனல்), த/பெ. திரு. ஆறுமுகம், வசிப்பிட முகவரி : 39/93A, சக்தி நகர், கவுண்டம்பாளையம், கோயமுத்தூர் – 641 030 <br> **உத்தரவாதமளித்தவர்கள்/ அடமானதாரர்கள் :** <br> **6) திருமதி. C.வளர்மதி,** க/பெ. திரு. சந்திரசேகரன், வசிப்பிட முகவரி : 8/271, தேவாங்கபுரம் வீதி, தொட்டம்பாளையம், சத்தியமங்கலம் – 638 451; <br> **7) திரு. V.ஆறுமுகம்,** த/பெ. திரு. வெங்கடசாமி, வசிப்பிட முகவரி : எண்.39/93-A, சக்தி நகர், கவுண்டம்பாளையம், கோயமுத்தூர் – 641 030; <br> **8) திருமதி. R.செல்வி,** வசிப்பிட முகவரி : 284, புங்கம்பள்ளி, விண்ணப்பள்ளி அஞ்சல், சத்தியமங்கலம் – 638 402; | **(அட்டவணைச் சொத்து) :** <br> **லாட்–1 : திருமதி. R.செல்வியின் பெயரில் உள்ள சொத்து. (PAN NO GQBPS0653C) (Doc No.379/1977)** <br> கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், புஞ்சை புளியம்பட்டி சார் பதிவு மாவட்டம், ஈரோடு மாவட்டம், சத்தி தாலூகா, புஞ்சை புளியம்பட்டி கிராமம், சர்வே எண்.142/2A மற்றும் 142/1, இதிலமைந்த 1.58½ ஏக்கர் நிலத்தின் எல்லைகள் விபரம் : K.பத்மநாபனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மற்றும் கிழமேல் வண்டித்தட பாதைக்கு வடக்கு, பள்ளவாரிக்குத் தெற்கு, R.K.திம்ம செட்டியாருக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, R செல்வியின் பெயரிலுள்ள புஞ்சை நிலத்துக்கு மேற்கு. மேற்படி சொத்தில் சர்வே எண்.142/1ல் உள்ள கிணறு, 0.08 ஏக்கர் நிலத்துடன், அதன் அனைத்து வசதிகளில் உரிமையுடன், வழித்தட மற்றும் வண்டித் தட உரிமைகளுடன். நடப்பு உட்பிரிவின்படி சொத்தானது சர்வே எண்.142/1 மற்றும் 142/2A2 ல் அமைந்துள்ளது. (11.11.2025 நாளிட்ட மதிப்பீட்டறிக்கையின்படி 1.585 ஏக்கர் நிலம் மட்டுமே மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் 0.08 ஏக்கர் பங்கு மதிப்பிடப்படவில்லை) <br> **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 11.352511 , 77.173968** | அ) 27.12.2023 <br> ஆ) **(i) கணக்கு எண்.0449008700333304– ரூ.4,94,65,224.92** <br> **(ii) கணக்கு எண்.044900IL00000611– ரூ.72,13,669.23** <br> **மொத்த தொகை: ரூ.5,66,78,894.15 (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து ஆறு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று நான்கு மற்றும் பைசா பதினைந்து மட்டும்) 31.05.2026** தேதி வரை மேலும் வங்கியால் ஏற்கனவே விதிக்கப்பட்ட கட்டணங்கள்/பிற செலவுகள் மற்றும் **01.06.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். <br> **இ) 25.10.2024** <br> **ஈ)** அடையாளம் | லாட் – 1 <br> **1) ரூ.1,44,51,000/–** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து நான்கு லட்சத்து ஐம்பத்து ஓராயிரம் மட்டும்) <br> **2) ரூ.14,45,100/–** (ரூபாய் பதினான்கு லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து நூறு மட்டும்) <br> **3) ரூ.1,00,000/–** (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) <br> **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 23.06.2026 (செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** |
| 2 | **9) திருமதி. கவிதாம்பிகை (திருமதி. V.சாந்தியின் சட்டபூர்வ வாரிசுதாரர்),** வசிப்பிட முகவரி: 8/180, தொட்டம்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் – 638 451 <br> **10) மைனர். V.K.அஸ்வந்த்** (திருமதி. V.சாந்தியின் சட்டபூர்வ வாரிசுதாரர்), (பிரதிநிதியாக அவரது தாயார்/பாதுகாவலர் திருமதி. கவிதாம்பிகை), வசிப்பிட முகவரி : 8/180, தொட்டம்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு – 638451; <br> **11) மைனர். V.K.பூஜா** (திருமதி. V.சாந்தியின் சட்டபூர்வ வாரிசுதாரர்), (பிரதிநிதியாக அவரது தாயார்/பாதுகாவலர் திருமதி. கவிதாம்பிகை), வசிப்பிட முகவரி : 8/180, தொட்டம்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு – 638451; <br> **12) திருமதி. சுலோசனா** தா/பெ. லேட். சசிகலா, (திருமதி. V.சாந்தியின் சட்டபூர்வ வாரிசுதாரர்), வசிப்பிட முகவரி : 8/180, தொட்டம்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் – 638 451 <br> மேலும் : எண்.8/278, தேவாங்கபுரம், தொட்டம்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு – 638 451; <br> **13) மைனர். பூர்வி** (திருமதி. V.சாந்தியின் சட்டபூர்வ வாரிசுதாரர்), (பிரதிநிதியாக லேட். சசிகலாவின் தாயார் திருமதி. சுலோசனா (பாட்டி) ), வசிப்பிட முகவரி : 8/180, தொட்டம்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு – 638 451 <br> மேலும் : எண்.8/278, தேவாங்கபுரம், தொட்டம்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு – 638 451; <br> **14) மைனர். அர்ஜுன்** (திருமதி. V.சாந்தியின் சட்டபூர்வ வாரிசுதாரர்), (பிரதிநிதியாக லேட். சசிகலாவின் தாயார் திருமதி. சுலோசனா (பாட்டி) ), வசிப்பிட முகவரி : 8/180, தொட்டம்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு – 638 451 <br> மேலும் : எண்.8/278, தேவாங்கபுரம், தொட்டம்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் – 638 451; <br> **15) திரு. K.துரைராஜ்,** 8A, பூலாங்குளம், குன்னத்தூர், அவிநாசி, திருப்பூர் – 638 103 <br> **16) திருமதி. R.செல்வி,** க/பெ. திரு. ராமசாமி, (உத்தரவாதமளித்தவர், M/s. லேண்ட்மார்க் இம்பெக்ஸ் இண்டர்நேஷனல்), எண்.284, புங்கம்பள்ளி, விண்ணப்பள்ளி அஞ்சல், சத்தியமங்கலம் – 638 402 | **லாட்–2 : லேட். திருமதி. V.சாந்தியின் பெயரில் உள்ள சொத்து. (Doc No.6834/2020)** <br> கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் சார் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் தாலூகா, தொட்டம்பாளையம் கிராமம், பொது சர்வே எண்.15/1 மற்றும் 15/2 ல் உள்ள 0.29.0 ஹெக்டேர் நிலம், பொது சர்வே எண்.15/2 ல் உள்ள 0.39.0 ஹெக்டேர் நிலம் மொத்தம் 0.68.0 ஹெக்டேர், இதில் லேஅவுட் வீட்டு மனைகள் அமைக்கப்பட்டதில், லேஅவுட் பிளானின்படி மனை எண்.8 மற்றும் 20 சேர்ந்த 2,100 சதுரடிக்கு எல்லைகள் விபரம் : மனை எண்.8 மனை எண்.8 ன் ஒரு பகுதிக்கு எல்லைகள் : மனை எண்.7 க்கு வடக்கு, மனை எண்.9 க்குத் தெற்கு, பஞ்சாயத்து மன்றத்திற்குச் சொந்தமான நிலத்திற்குக் கிழக்கு, மனை எண். 20க்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், கிழமேல் வடபுறம் – 10 அடி, கிழமேல் தென்புறம் – 10 அடி, தென்வடல் கிழபுறம் – 40 அடி, தென்வடல் மேற்புறம் – 40 அடி. பரப்பு : 400 சதுரடி. மனை எண்.20 எல்லைகள் : மனை எண்.21 க்கு வடக்கு, மனை எண்.19 க்குத் தெற்கு, மேற்குறிப்பிட்ட மனைக்குக் கிழக்கு, 18 அடி தென்வடல் ரோடுக்கு மேற்கு. இதன் மத்தியில், கிழமேல் வடபுறம் – 42 ½ அடி, கிழமேல் தென்புறம் – 42 ½ அடி, தென்வடல் கிழபுறம் – 40 அடி, தென்வடல் மேற்புறம் – 40 அடி. பரப்பு : 1700 சதுரடி. மேற்குறிப்பிட்ட மனை எண்.8 மற்றும் 20 ல், ஆர்சிசி கூரையிட்ட குடியிருப்புக் கட்டிடத்துடன், வரிவிதிப்பு எண்.2811, கதவு எண்.8/277 A12, அதன் அனைத்து மின்சார சர்வீஸ் இணைப்பு, காப்புத் தொகையுடன், சர்வீஸ் இணைப்பு எண்.04–361–003–1779, அதன் அனைத்துக் கதவுகள், சன்னல்கள், பிட்டிங்குகள், பொருத்தியவைகளுடன், பாத்தியதைகளுடன், அனைத்து வசதிகளில் உரிமை, பொது வழித்தட மற்றும் வண்டித்தட உரிமைகளுடன். மனை எண்.8 மற்றும் 20ன் சேர்ந்த பரப்பு 2100 சதுரடி. மேற்படி சொத்து தேவாங்கபுரம் வீதியில் அமைந்துள்ளது. <br> **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 11.4779300 , 77.1491088** | | லாட் – 2 <br> **1) ரூ.55,25,000/–** (ரூபாய் ஐம்பத்து ஐந்து லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) <br> **2) ரூ.5,52,500/–** (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) <br> **3) ரூ.50,000/–** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) <br> **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 23.06.2026 (செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** |

**மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்**

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **23.06.2026 (செவ்வாய்க்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
**https://baanknet.com & www.pnbindia.in**

தேதி : 03.06.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு